**(2016.04.07 ஆந் திகதியன்று உடன்பாடு தெரிவிக்கப்பட்டது)**

# மக்கள் சீனக் குடியரசிற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்குமிடையிலான கூட்டுக்கூற்று

1. மக்கள் சீனக் குடியரசின் அரச பேரவையின் பிரதமர் அதிமேதகு லி கெக்கியாங் அவர்களின் அழைப்பின் பேரில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமர் அதிமேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2016 ஏப்ரல் 06 ஆந் திகதி தொடக்கம் ஏப்ரல் 09 ஆந் திகதிவரை மக்கள் சீன் குடியரசிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

2. இந்த விஜயத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவின் அதிமேதகு சனாதிபதி ஸீ ஜின் பிங் அவர்களைச் சந்தித்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்கள் சீனக் குடியரசின் அரச பேரவையின் பிரதமர் அதிமேதகு லி கெக்கியாங் அவர்களுடன் கலந்துரையாடல்களைச் செய்துள்ளதுடன் தேசிய மக்கள் காங்கிரசின் நிலையியல் குழுவின் தவிசாளராகிய ஜாங்டிஜியாங்க் அவர்களையும் சந்தித்துள்ளார். இந்த இரண்டு நாடுகளின் தலைவர்களும் சிறந்ததும் நட்புறவு ரீதியானதுமான நிலைமையில் கருத்துக்களை ஆழமான முறையில் பரிமாறிக் கொண்டுள்ளதுடன் சீனாவிற்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்புகள் பற்றியும் அத்துடன் பரஸ்பர கரிசனையுடைய சருவதேச மற்றும் பிராந்திய விடயங்கள் பற்றியும் பரந்த அளவிலான உடன்பாட்டை எய்தியுள்ளனர்.

3. இரு தரப்பினர்களும் சீனாவிற்கும் இலங்கைக்குமிடையிலான தொடர்புகள் நீண்டகாலப் போக்கில் மாற்றமடையாமல் நிலைத்திருந்ததாகவும் இந்த இரு தரப்புகளும் நட்புறவு நீடியகாலத்திற்கு நிலைத்திருப்பதற்காக பணியாற்றும் எனவும் குறிப்பிட்டு அக்கருத்தை பகிர்வு செய்துள்ளன. சீனாவிற்கும் இலங்கைக்குமிடையிலான மனமார்ந்த பரஸ்பர உதவி மற்றும் எக்காலமும் நீடித்திருக்கும் நட்புறவு ஆகியவற்றின் அடிப்படையிலான திறமுறை கூட்டுறவுப் பங்காளித்துவம் இரண்டு நாடுகளினதும் அடிப்படை கரிசனைகளுக்கு உதவுகின்றதுடன் இந்த இரண்ட நாடுகளினதும் அபிவிருத்திக்கும் அவற்றின் மக்களின் அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்கின்றது. இந்த இரண்டு தரப்புகளும் அவற்றின் பரஸ்பர நன்மைபயக்கும் ஒத்துழைப்பிற்கும் பல்வேறு பிராந்திய மற்றும் சருவதேச அரங்குகளில் பரஸ்பர உதவி வழங்குவதற்குமான அவற்றின் நட்புறவை பேணும் உறவைப் பேணிக் கொண்டிருக்கும்.

4. இந்த இரண்டு தரப்புகளும் தங்களுடைய நாடுகளின் இறைமை, ஆள்புல முழுமை, ஸ்திர நிலை மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான பொதுக் கரிசனை மற்றும் மதிப்பு ஆகியவிடயங்களில் தங்களுடைய பரஸ்பர ஆதரவு வழங்குதலை உறுதிப்படுத்தியுள்ளன. இந்த இரு தரப்புகளும் சமாதான கூட்டுறவு வாழ்க்கைக்கான ஐந்து கோட்பாடுகளை கடைப்பிடிப்பதற்கும் பிற நாடுகளின் உள்நாட்டு விடயங்களில் தலையிடாமை பற்றிய சருவதேச சட்டத்தின் அடிப்படை விதிமுறைகளை பின்பற்றுவது பற்றிய தமது நிலையை வலியுறுத்தியுள்ளன. சீன அரசாங்கத்தினால் அதன் தேசிய ஒற்றுமையை பாதுகாப்பதன் பொருட்டு ஓர் சீனாக் கொள்கைக்கான தனது பொறுப்பை அது மேற்கொள்வதற்கும் அதனால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதற்குமான தனது பொறுப்பை இலங்கை மீளஉறுதிப்படுத்தியுள்ளது. இந்த இரண்டு தரப்புகளுக்கும் தென்சீனக் கடலில் சமாதானத்தையும் நிலைபேற்று நிலையையும் பேணுவதற்கான முக்கியத்துவத்தையும் பற்றி வலியுறுத்தியுள்ளன. இலங்கை சருவதேச சட்டங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு அமைவாக ஆக்கபூர்வமான உரையாடல், கலந்துரையாடல் ஒத்துழைப்பு வழங்கி சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் பிணக்குகளும் வேறுபாடுகளும் தீர்வு செய்யப்பட

வேண்டுமென அழைப்பு விடுக்கின்றது. இலங்கை இப்பிராந்தியத்தில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுவதற்காக இத்தகைய உரையாடலை ஊக்குவிப்பதற்கான சீனாவின் முயச்சிகளையும் தயார் நிலையையும் பாராட்டுகின்றது.

சீனா தேசிய ஐக்கியம்ளூ சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றைப் பேணுவதற்கும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுதுவதற்கும் இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குகின்றது. இலங்கை ஓர் சீனக் கொள்கைக்கான தனது பொறுப்பையும் சீனாவின் தேசிய ஐக்கியத்தைப் பாதுகாப்பதில் சீனா மேற்கொள்ளுகின்ற முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்குகின்றது. சீனா கடற்பரப்பு விடயங்கள் மீதான தனது நிலையை வலியுறுத்திக் கூறுகின்றதுடன் தென் சீனக் கடலில் சமாதானத்தையும் ஸ்திர நிலைமையையும் பேணுவதற்கான முக்கியத்துவத்தையும் பற்றியும் வலியுறுத்திக் கூறுகின்றது. இலங்கை இருதரப்பு ரீதியாக ஆக்கபூர்வமான கலந்துரையாடல், பேச்சுவார்த்தை நடாத்துதல் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் வழங்கப்படும் ஒத:துழைப்பு மூலமாக பிணக்குகளையும் வேறுபாடுகளையும் தீர்வு செய்யுமாறு அழைப்பு விடுக்கின்றது. அத்தகைய பேச்சுவார்த்தை நடாத்துதல், கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கு ஒத்துழப்பு வழங்குவதற்கான சீனாவின் முயற்சிகளையும் ஆயத்த நிலையையும் கூட வரவேற்கின்றது.

5. சீனாவின் சனாதிபதி ஸீ ஜின் பிங் அவர்களினால் 2014 செப்டம்பரில் உத்தியோகபூர்வமான மேற்கொள்ளப்பட்ட இலங்கைக்கான விஜயமும் இலங்கையின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் 2015 மார்ச் மாதத்தில் சீனாவிற்கு உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்பட்ட விஜயமும் வரலாற்று ரீதியாக முக்கியமானவைகளாகவிருந்தமையை இரு தரப்பினர்களும் ஒத்துக் கொண்டுள்ளனர். இரண்டு அரசாங்கங்களும் இந்த இரண்டு நாடுகளின் தலைவர்களினால் எய்தப்பட்ட உடன்பாட்டை எய்துவதற்கான கூட்டு முயற்சிகளையும் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளை அதிசிறந்த மட்டமொன்றுக்குத் தரமுயர்த்துவதற்காக சகல துறைகளிலும் கணிசமான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் கூட:டு முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுவர்.

6. இருதரப்பு விஜயங்கள் மற்றும் பல்தரப்பு அரங்குகளிலான கூட்டங்கள் மூலமாக சகல மட்டங்களிலும் அதிகரித்த உயர்மட்ட பரிமாற்றங்கள் மற்றும் கிரமமான தொடர்புகள் மூலமாக இருதரப்புத் தொடர்புகளை மேலும் அதிகரிப்பதற்கு உடன்பட்டுள்ளன.

7. பண்டைய காலத்தில் இலங்கை இந்து சமுத்திர வியாபார மையமாகவிருந்ததுடன் அது இந்த நிலைமையை மீள நிறுவுவதற்கு கருதுகின்றமை காரணமாக இலங்கை சீனாவினால் முன்வைக்கப்பட்டுள்ள வளைகோடு மற்றும் வீதி கொடைமுனைவில் தனது ஊக்கமான பங்குபற்றுகையை வலியுறுத்திக் கூறியுள்ளது. பாரிய பொருளாதார ஒத்துழைப்பிற்கான 21ஆம் நூற்றாண்டு பட்டுப் பாதையைக் கட்டி எழுப்புவதில் சீனாவின் கரிசனையை இலங்கையும் பகிர்ந்து கொண்டுள்ளது. இது நட்புறவு, பொருளாதார ஒத்துழைப்பு, சமூக கலாசாரப் பரிமாற்றம், இணைப்பு ஆகியவற்றுக்கான ஓர் பாதையாகவிருக்கும். இந்த இரண்டு தரப்புகளும் 21வது நூற்றாண்டு பட்டுப்பாதையை உட்கட்டமைப்பு அபிவிருத்தி, சீனாவிற்கும் இலங்கைக்குமிடையிலான சுதந்திர வியாபார உடன்படிக்கை இணக்கப்பேச்சுகள், கூட்டுத்துணிகர முயற்சிகளை ஊக்குவித்தல் பொருளாதாரம் கலாசாரம், விஞ்ஞானம், தொழினுட்பவியல் மற்றும் மக்களுக்கு மக்கள் என்ற தொடர்புகளை ஏற்படுத்துதல் மூலமாக மக்களுக்கு நன்மைகளை வழங்கும். இவற்றை மேலும் அதிகரிப்பதற்கும் பகிரப்பட்ட விதியையுடைய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கும் ஓர் வாய்ப்பாகப் பயன்படுத்தும்.

8. இலங்கை இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் சீனாவின் தொழில் முயற்சிகள் ஈடுபடுவதை வரவேற்கின்றது. அத்துடன் இலங்கை சீனாவின் தொழில் முயற்சிகளிலிருந்து மேலும் முதலீடுகளை வரவேற்கின்றதுடன் அவற்றிற்கு சாதகமான முதலீட்டு நிலைமையையும் வியாபாரச் சுற்றாடலையும் உருவாக்குவதன் மூலம் அந்த சீனக் கம்பனிகளுடன் தனது ஒத்துழைப்பைத் தொடர்ந்து வைத்திருக்கும் சீனா பரஸ்பர நன்மைகளைப் பெறுவதன் நோக்கில் இலங்கையில் முதலீடு செய்யுமாறு போட்டிகரமான சீனத்தரப்புக் கம்பனிகளுக்கு ஊக்குவிப்பைத் தொடர்ந்தும் வழங்கும். சீனத்தரப்பு இலங்கையின் உட்கட்டமைப்பு நிருமாணத்திற்கு நிதி உதவி வழங்குமாறு தனது நிதி நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பை வழங்கும்.

9. இரு தரப்புகளும் போக்குவரத்து, மின்வலு மற்றும் பிற உட்கட்டமைப்பு, கைத்தொழில் பேட்டைகள் மற்றம் உற்பத்திக் கைத்தொழில் துறைகள் முதலியவற்றில் தங்களுடைய ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு உடன்பட்டுள்ளன. இலங்கை கொழும்புத் துறைமுக நகரக் கருத்திட்டத்தின் வேலையை திரும்பவும் தொடங்குவதாக அறிவித்துள்ளதுடன் முதலீடு, பொருளாதார மற்றும் தொழினுட்ப ஒத்துழைப்பு மீதான விரிவான நடைமுறைப்படுத்தல் மீது இலங்கையின் மூலோபாய மற்றும் சருவதேச வர்த்தக அமைச்சிற்கும் சீனாவின் வர்த்தக அமைச்சிற்குமிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள பெரிய கருத்திட்டங்களை மேம்படுத்துவதற்கு சீனக்கம்பனிகளுடன் ஒத்துழைப்பதற்கான விருப்பத்தையும் தெரிவித்துள்ளது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது 2016 ஏப்ரல் 07 ஆந் திகதியன்று கையொப்பமிடப்பட்டுள்ளது.

10. இருதரப்புகளும் இருதரப்பு பொருளாதார மற்றும் வியாபார ஒத்துழைப்பில் எய்தப்பட்டுள்ள சாதனைகளை மீளாய்வு செய்து அவை பற்றி திருப்தி தெரிவித்துள்ளதுடன் சீனா இலங்கை கூட்டு வியாபாரக் குழுவின் 7வது கூட்டத்தை இவ்வாண்டிற்குள் முற் திகதியொன்றில் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளன. கூட்டு வியாபாரக் குழு அடுத்த ஐந்து ஆண்டுகளிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் இருதரப்பு பொருளாதார மற்றும் வியாபார ஒத்துழைப்பு மீதான அபிவிருத்தித் திட்டத்தை வகுத்தமைப்பதற்குத் தீர்மானிக்கும். இரண்டு தரப்புகளும் முடிந்தவரை விரைவாக சீனா - இலங்கை சுதந்திர வியாபார இணக்கப்பேச்சுகளின் மூன்றாவது சுற்றை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளதுடன் இருதரப்பு வியாபாரத்தையும் பொருளாதார ஒத்துழைப்பையும் அதிகரிக்கும் நோக்குடன் முற்திகதியொன்றில் இணக்கப் பேச்சுகளை பூர்த்தி செய்வதற்கு உடன்பட்டுள்ளன. இரண்டு தரப்புகளும் பொருட்களையும் சேவைகளையும் முதலீடுகளையும் பொருளாதார ஒத்துழைப்பையும் உள்ளடக்குகின்றதும் முன்னைய சீனா - இலங்கை சுதந்திர வியாபார உடன்படிக்கை மீது விரிவான வியாபார உடன்படிக்கையொன்றை செய்து கொள்வதற்கு உடன்பட்டுள்ளன.

11. சீனத்தரப்பு இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கும் மக்களின் சீவனோபாயத்தின் மேம்பாட்டிற்கும் மற்றும் கருத்திட்டங்களுக்கும் குறிப்பாக பொது மக்களின் சுகாதார சேவை, கமத்தொழில் மற்றும் நீரின் பேணுகை துறைகளிலான கருத்திட்டங்களுக்கும் தனது உதவியைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு வாக்குறுதி அளித்துள்ளது. சீனத்தரப்பினர் இலங்கையில் கமத்தொழில் துறையிலுள்ள நிருவாக மற்றும் தொழினுட்ப ஆளணியினர்களுக்கு விசேடமாக கடற்றொழில், கலப்பு நெல் மற்றும் தேயிலைக் கைத்தொழில் ஆகியவற்றில் பயிற்சியையும் ஆராய்ச்சி வாய்ப்புகளையும் வழங்குவதற்கு விருப்பமுடையவர்களாகவிருக்கின்றனர். இருதரப்பினர்களும் உள்நாட்டு மீன்பிடியிலும் நீரக வள மூலகத்திலும் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்காக மீன்பிடித் தொழிலிலான ஒத்துழைப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக

நடைமுறைப்படுத்துவதற்காக நெருக்கமாக பணியாற்றுவர். இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் சீனத்தரப்பினர்களால் வழங்கப்படும் உதவியை இலங்கை பாராட்டியுள்ளது.

12. இருதரப்புகளும் கடற்கரையோர மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு பற்றிய கூட்டுக்குழுவின் இரண்டாவது கூட்டத்தைக் கூட்டுவதற்கு உடன்பட்டுள்ளனவென்பதுடன், அத்துடன் விரைவில் கடற்பரப்பு மற்றும் கடற்கரையோர ஒத்துழைப்பு மீதான முதலாவது வேலக்களத்தை ஆரம்பிப்பதற்கு சமுத்திர அவதானிப்பு, கடற்பரப்பு வளிமண்டலவியல், வாழிடமுறைமை பாதுகாப்பு, கடற்கரையோர வள முகாமைத்துவம், நிலக்கீழ் நீர் கூட்டுத் தொல்பொருளியல், ஆராய்ச்சியும் பாதுகாப்பும், கடற்கொள்கைக்கு எதிரான போராட்டம், கடற்செலவுப் பாதுகாப்பு மற்றும் கடற்பரப்பு ஆளணியினர்கள் பயிற்சி முதலிய துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவித்தல் ஆகியவற்றிற்கான முதலாவது வேலைக்களத்தை ஆரப்பிப்பதற்கும் உடன்பட்டுள்ளனர். இரண்டு தரப்பினர்களும் இரண்டு நாடுகளின் இயைபுள்ள திணைக்களங்களுக்கிடையே ஊழலுக்கெதிராக பின்பற்றப்பட்ட மேற்பார்வை மற்றும் நடவடிக்கைகளில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்கும் உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

13. இந்த இரண்டு தரப்பினர்களும் பாதுகாப்புத் துறையில் நெருக்கமான தொடர்புகளைப் பேணுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்கள் பாதுகாப்பு மற்றும் ஏமம் தொடர்பிலான விடயங்கள் மீது ஒத்துழைப்பதற்கும் ஒன்றாகப் பணியாற்றுவதற்குமான தேவையை வலியுறுத்திக்கூறியுள்ளனர்.

14. இந்த இரண்டு தரப்பினர்களும் தொழினுட்பவியல் மற்றும் கமத்தொழில் துறைகளில் ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கு உடன்பட்டுள்ளனர். இலங்கையிலுள்ள இளம் விஞ்ஞானிகளுக்கு சீனாவில் குறுந்தவணை குறித்தொதுக்கப்பட்டுள்ள பணிகளுக்காக சீனாவுக்கு விஜயம் செய்வதற்கு வாய்ப்புக்களை வழங்கும் என்பதுடன் இலங்கையில் திறன் கட்டியெழுப்புதலை அதிகரிப்பதற்காக ஓர் கமத்தொழில் தொழில்நுட்ப செய்முறைகாட்டல் பூங்காவையும் உயிரியல் தொழினுட்பவியல் கூட்டுப் பரிசோதனைக் கூடம் ஒன்றை நிறுவுவதற்கான ஆழமான ஆய்வொன்றைச் செய்வதற்கும் உடன்பட்டுள்ளன. அத்துடன் இந்த இரண்டு தரப்புகளும் பாதுகாப்பான நீர்வழங்கல் தொழினுட்பம் மீதான கூட்டுஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையக் கருத்திட்டத்தை முடிந்தவரை விரைவாக தொடங்குவதற்கு உடன்பட்டுள்ளன. சீனா நாட்பட்ட சிறுநீரக நோயை ஏற்படுத்துகின்ற காரணிகளை கண்டறிவதில் இலங்கைக்கு உதவி செய்ய விரும்புகின்றது.

15. இந்த இரண்டு தரப்பினர்களும் இலங்கைக்கு விஜயம் செய்யும் உல்லாசப் பிரயாணம் மீதான இருதரப்பு ஒத்துழைப்பானது உல்லாசப் பிரயாணம் செய்யும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கையில் சீனா இரண்டாவது ஆகப்பெரிய மூலமாக வந்துள்ளதுடன் அது இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் கவனத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளன. சீனாவில் நடாத்தப்படவுள்ள உலக உல்லாசப் பிரயாண அபிவிருத்தியின் முதலாவது கூட்டத்தில் பங்குபற்றுமாறு சீனா இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு தனது நாட்டு பிரஜைகளுக்கு தொடர்ந்தும் ஊக்குவிப்பு வழங்குமென்பதுடன் சீன உல்லாசப் பிரயாணச் சந்தையில் இலங்கை தனது பங்கை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் இலங்கைக்கு உதவி வழங்கும். இந்த இரண்டு தரப்பினர்களும் இரண்டு நாடுகளின் விமானக் கம்பனிகளையும் (எயர்லைன் கம்பனிகள்) அடிக்கடி நேரடி பறத்தல்களை மேற்கொள்ளுமாறு ஊக்குவிப்பு வழங்கும்.

16. இரண்டு தரப்பினர்களும் மக்களுக்கு மக்கள் பரிமாற்றங்களையும் கலாசார ஒத்துழைப்பையும் சீனாவினதும் இலங்கையினதும் மக்களுக்கிடையிலான பலமான

வரலாற்று இணைப்புகளின் காரணமாக பலப்படுத்துவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளன. இத்தொடர்பில் அவை இரண்டு நாடுகளின் கலாசார அதிகார பீடங்களினால் சீனா - இலங்கை கடற்பரப்பு பட்டுப்பாதை என்ற தொனிப்பொருளில் கொழும்பில் கூட்டாக பொருட்காட்சியொன்றை நடாத்துவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இந்த இரண்டு தரப்பினர்களும் தங்களுடைய மக்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வையும் நட்புறவையும் ஆழமாக்குவதன் பொருட்டு சீன கலாசார நிலையத்தினதும் கொன்பியூசியஸ் நிறுவகத்தினதும் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் தீவிர வகிபாகமொன்றை வகிக்கும். வாழ்க்கைத்தொழில் பயிற்சிக் கல்வித்துறையில் இலங்கையுடனான ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்காக அடுத்த ஆண்டுகளில் இலங்கைக்கு கூடுதலான புலமைப் பரிசில்களை வழங்குவதற்கும் 2000 பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்கும் விரும்புகின்றது. இந்த இரண்டு தரப்பினர்களும் பல்கலைக்கழகங்களுக்கும் வாழ்க்கைத்தொழில் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் சிந்தனைச் சிற்பிகளுக்கும், ஊடகங்கள் முதலியனவற்றுக்குமிடையே பரிமாற்றங்களையும் ஒத்துழைப்பையும் விரிவுபடுத்துவதற்கு ஊக்குவிப்பு வழங்கியுள்ளன. சீனாவிற்கு விஜயம் செய்யுமாறு 100 இலங்கை இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தமைக்காக இலங்கை சீனாவிற்கு நன்றி தெரிவித்துள்ளது.

17. இந்த இரண்டு தரப்பினர்களும் ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஆசியான் பிராந்திய அரங்கு மற்றும் பிற பிராந்திய அரங்குகள், பல்தரப்பு அரங்குகள் ஆகியவற்றில் கூட்டிணைப்பையும் ஒத்துழைப்பையும் மேலும் அதிகரிப்பதற்கு உடன்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பின் சீர்திருத்தம், மனித உரிமைகள், காலநிலை மாற்றம், பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது பற்றி கலந்துரையாடியுள்ளன. சார்க் அமைப்புடன் முன்னேற்றகரமானதும் கருத்திட்ட அடிப்படையிலான ஈடுபாட்டை மேற்கொள்வதற்கான தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. சார்க் கட்டமைப்பின் கீழ் சீனத்தரப்புடனான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு இலங்கை தயார் நிலையிலுள்ளது. தாபக உறுப்பினரொருவராக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் இலங்கை சேருவதை சீனா வரவேற்றுள்ளது.

18. இரண்டு தரப்பினர்களும் சீனாவிற்கும் இலங்கைக்குமிடையிலான இராச தந்திரத் தொடர்புகள் நிறுவப்பட்ட 60வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு கூட்டு முயற்சிகளுடன் எல்லாவற்றையும் உள்ளிட்ட திட்டமொன்றை வரைந்து அதை நிறைவேற்றுவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

19. பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தமக்கும் பேராளர் குழுவிற்கும் வழங்கப்பட்ட சிறந்த வரவேற்பு உபசாரத்திற்காக மக்கள் சீனக்குடியரசு அரசாங்கத்திற்கும் சீன மக்களுக்கும் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளார். பிரதமர் விக்கிரமசிங்க இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் லி கெக்கியாங் அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். பிரதமர் லி கெக்கியாங் இந்த அழைப்பிற்கு நன்றி தெரிவித்ததுடன் இருதரப்பினர்களுக்கும் வசதியான திகதியொன்றில் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

20. இந்த விஜயத்தின் போது இரண்டு தரப்பினர்களும் வியாபாரமும் முதலீடும் மற்றும் விஞ்ஞானமும் தொழினுட்பவியலும், சுகாதாரம், நீதித்துறை முதலிய துறைகளை அளாவியுள்ள உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டுள்ளனர்.

பீஜிங்கில் ஏப்ரல் 9 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது.